**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No.16 of 2023

Deposition of P.W.1

Name of the Witness: திரு.ரவி

Date : 12.02.2025

**குறுக்கு விசாரணை**

நான் தற்போது தருமபுரி அன்னை சத்யா நகரில் கதவு எண் 4/513ல் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் 2003லிருந்து இந்த முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீடு எனது மாமியாரின் வீடு. அந்த வீட்டின் கிரைய பத்திரம் எனது பெயரில் உள்ளது என்றால் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் குடியிருக்கும் வீடு எனது மாமியார் வீடு இல்லை என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டின் கிரைய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாரா என்றால் இல்லை. அந்த ஆவணம் என்னிடத்தில் இல்லை.

2) நான் குடியிருக்கும் வீட்டின் வீட்டு வரி, தண்ணீர் வரி, மின்சார கட்டண ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேனா என்றால் அது என் பெயரில் இல்லை. அது யார் பெயரில் உள்ளது என்பதை காட்ட அந்த ஆவணங்களை தாக்கல் செய்ய தயாரா என்றால் அந்த ஆவணங்கள் என்னிடத்தில் இல்லை. வீட்டில் நான், என் மனைவி, என் மகள், என் மகன் குடியிருக்கிறோம். என் மாமியார் பீடிஓ காலனியில் அவரது மகன், மருமகளுடன் குடியிருக்கிறார். நான் குடியிருக்கும் வீடு அரசு புறம்போக்கு, அதற்குண்டான ஆவணங்கள் எதுவும் என்னிடத்தில் இல்லை. நான்

குடியிருக்கும் வீட்டில் தரைதளம், முதல் தளம் உள்ளது. எனக்கு 18.02.2002ல் திருமணமானது.

3) நான் குடியிருக்கும் வீடு 1996லே கட்டப்பட்டது என்றாலும் அதற்கு ஆதாரம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தருமபுரி பென்னாகரம் ரோடு ஆட்டுகாரம்பட்டியில் எனக்கு ரவி ஆயில் மில் என்ற மில் உள்ளது. அந்த மில் 2022ல் ஆரம்பிக்கப்பட்டது. அந்த ஆயில் மில் ஆரம்பிப்பதற்கு முன்பாக விவசாய பொருள்கள் அரைக்கும் மில் வைத்திருந்தேன். அது 2002ம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வந்தது. அந்த ஆயில் மில்லின் பதிவு சான்றிதழ் உள்ளதா என்றால் சிறுதொழில் சான்றிதழ் உள்ளது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், 2002க்கு முன்பாகவே அங்கு ஆயில் மில் இருந்து வந்தது என்றால் சரியல்ல. 2002க்கு முன்போகவே அங்கு ரைஸ்மில் இருந்தது. அதை எனது மாமியார் நடத்தி வந்தார்.

4) நான் வருமான வரி செலுத்தவில்லை. எனக்கு பேன்கார்டு உள்ளது. நீதிமன்றத்தில் அதன் நகலை ஒப்படைக்க தயாராக உள்ளேன். அந்த ரைஸ்மில் இன்றளவும் நடந்து வருகிறது என்றால் ஆமாம். நான் 8வது பெயில். நான் தருமபுரி பசுவராஜ்க்கு மில்லிற்கு எதிர்த்தாற் போல் தங்கியிருந்து சுயமாக தொழில் செய்து வந்தேனா என்றால் இல்லை. எனக்கு திருச்சி மாவட்டம், மன்னச்சநல்லூரில் எனக்கு தற்போதும் ஆயில் மில் உள்ளது என்றால் சரியல்ல. நான் அங்கு போனால் கோவில் இடத்தில் வாடகைக்கு தங்குவேன். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் நான் திருச்சி மாவட்டம், மன்னச்சநல்லூரில் நான் மில் வைத்திருக்கும் முகப்பு பகுதி என்றால் நான் வாடகைக்கு குடியிருந்த முகப்பு பகுதி. என்னிடம் காட்டப்படும் ஆயில் மில்லின் புகைப்படும்

என்றால் அந்த புகைப்படத்தில் உள்ளது என்னுடைய கடை தான். அங்கு நாங்கள் தவிடு வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தோம். பாப்பாத்தியம்மாள சத்திரத்திற்கு சொந்தமானது. அங்கு நான் வாடகைக்கு இருந்தேன். அதற்கான வாடகை ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 2022லிருந்து தான் வாடகை நான் செலுத்தி வருகிறேன். நான் பத்து வருடங்களாக வரி செலுத்தினேன். ஆனால் எந்த வருடம் என்று நியாபகம் இல்லை.

5) தருமபுரி சத்யா நகர் வீட்டையும், ஆட்டுகாரம்பட்டி மில்லையும், திருச்சி மன்னச்சநல்லூர் ஆயில் மில்லை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி தொழில்கள் நான் தனியாக இருந்த செய்தது. கூட்டு குடும்ப சொத்துக்கள் இல்லை.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)*